## சுருக்கம்

பணியமைப்பு - நெடுஞ்சாலைத்துறை - தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியியல் சார்நிலைப் பணிகள் – இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடம் - வேலை வாய்ப்பகம் மூலம் நேரடி நியமன முறை என்பதை இரத்து செய்தல் – அப்பணியிடத்தை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் கொண்டு வந்து நேரடி நியமன முறையில் நிரப்ப அனுமதி அளித்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்எம்1) துறை

அரசாணை (நிலை) எண்.177 நாள் 24.10.2018

விளம்பி, ஐப்பசி 7,

திருவள்ளுவராண்டு 2049.

படிக்கவும்:

1. அரசு கடித (ப) எண். 26, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்எம்1) துறை, நாள் 07.02.2014.
2. முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கடித எண் 12390/நிர் 5(2)/2013, நாள் 01.12.2017.
3. அரசு கடித எண் 14808/எச்எம்1/2017-3, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 12.02.2018.
4. ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் கடித எண் ப.ப.1/4908/2018, நாள் 03.04.2018.
5. அரசு கடித எண் 14808/எச்எம்1/2017-7, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 16.05.2018.
6. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண் 3231/RND-C4/2018, நாள் 29.06.2018.
7. அரசு கடித எண் 14808/எச்எம்1/2017-9, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, நாள் 31.07.2018.
8. தமிழ்நாடு அரசு தலைமை வழக்குரைஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களின் கருத்துரை எண்.140/AGVN/ 2018, நாள் 27.09.2018.

------

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில், நெடுஞ்சாலைத்துறையில் 2013-2014ஆம் ஆண்டிற்கான இளநிலை வரைதொழில் அலுவலர் பதவிக்கு

ஒப்புதல் அளிக்கப்பட்ட 188 (182+6 பின்னடைவு பணியிடங்கள்) காலிப்பணியிடங்களுக்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு 29.10.2015 நாளிட்ட தினத்தந்தி மற்றும் The Indian Express ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டது.

2. இதன் தொடர்பாக, இயக்குநர் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, அவர்களிடமிருந்து மாநிலப் பதிவுமூப்பிலான வேலைவாய்ப்பு அலுவலக பதிவுதாரர்களின் பரிந்துரைப் பட்டியல் பெறப்பட்ட போது, அப்பரிந்துரைப்பட்டியல் 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் எனவும், அதற்கு பின்னர் மேற்கொள்ளப்படும் நியமனங்கள் விதிமுறைகளின்படி செல்லாது எனவும் அவரது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.

3. இதனை தொடர்ந்து வரப்பெற்ற விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு அவற்றில் தகுதியில்லாத விண்ணப்பங்கள் (வயது வரம்பு, கல்வித்தகுதி மற்றும் இதர காரணங்களுக்காக) நிராகரிக்கப்பட்டன. அவ்வாறு பரிசீலனை செய்யப்பட்டு இப்பதவிக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களை 18.01.2016 முதல் 05.02.2016 வரையிலான காலங்களில் நேர்காணலில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கப்பட்டு நேர்காணல் நடத்தப்பட்டது. அவ்வாறு நிராகரிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களில் 40 மனுதாரர்களால் குழுவாகவும், தனித்தனியாகவும் வயது வரம்பு தளர்வு கோரியும், தொழில் நுட்பப்பணியாளர்கள் அடிப்படையிலும் சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து, எதிர் ஆணை உறுதி ஆவணங்கள் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளன.

4. இந்நிலையில், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட காலிப்பணியிடங்களுக்கு இயக்குநர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, கிண்டி, சென்னை அவர்களால் மாநில அளவிலான ஒருங்கிணைக்கப்பட்ட மாநிலப் பதிவுமூப்பிலான பட்டியல் பெறப்பட்டு நேர்காணல் நடத்தப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாததால், மேற்கண்ட நேர்காணல் மற்றும் வேலைவாய்ப்பகம் மூலம் பணி நேரடி நியமனம் செய்தல் ஆகிய நடவடிக்கைகளை இரத்து செய்தும், மற்றும் இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடத்திற்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட 188 (182+6 பின்னடைவு பணியிடங்கள்) காலிப்பணியிடங்களுக்காக அப்பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் கொண்டு சென்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நேரடி நியமனம் செய்வதற்கான உரிய அரசாணையினை வழங்குமாறும் முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்கள் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. எனவே, முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கருத்துருவினை ஏற்று, நெடுஞ்சாலைத்துறையில் இளநிலை வரைதொழில் அலுவலர் பதவியில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளான நேர்காணல் (ம) வேலைவாய்ப்பகம் மூலம் பணிநேரடி நியமனம் செய்தல் ஆகியவற்றை இரத்து செய்யலாம் எனவும், மேலும் அப்பணியிடத்தினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் கொண்டு சென்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் முறையில் நிரப்பலாம் எனவும் உத்தேசிக்கப்பட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கோரப்பட்டது. இதன் தொடர்பாக, மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், நெடுஞ்சாலைத் துறையில் உள்ள இளநிலை வரைதொழில் அலுவலர் பதவியை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் கொண்டுவந்து, நேரடி நியமன முறையில் பணி நியமனம் செய்ய இசைவு அளித்துள்ளது.

6. மேலும் இந்நேர்வு தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்குகள் நிலுவையில் உள்ளதால், நெடுஞ்சாலைத்துறையில் உள்ள இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடத்தை நிரப்ப மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை இரத்து செய்வதற்கும் அப்பதவியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் முறையில் நிரப்புவதற்கும் தமிழ்நாடு அரசு தலைமை வழக்குரைஞரின் கருத்து மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கோரப்பட்டது. இதன் தொடர்பாக, மேலே எட்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசு தலைமை வழக்குரைஞர் அவர்கள் நெடுஞ்சாலைத் துறையில் உள்ள இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடத்தை நிரப்ப மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையை இரத்து செய்த பின்னர், அப்பதவியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமனம் முறையில் நிரப்புவதற்கு சட்ட ரீதியான தடை எதுவும் இல்லை என கருத்துரை வழங்கியுள்ளார்.

7. எனவே, முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை அவர்களின் கருத்துருவினை அரசு கவனமாக ஆய்வு செய்து, அதனை ஏற்று, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்ட நெடுஞ்சாலைத்துறையில் இளநிலை வரைதொழில் அலுவலர் பதவியில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளான நேர்காணல் (ம) வேலைவாய்ப்பகம் மூலம் பணிநேரடி நியமனம் செய்தல் ஆகியவற்றை இரத்து செய்தும், நெடுஞ்சாலைத் துறையில் உள்ள இளநிலை வரைதொழில் அலுவலர் பணியிடத்தினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள்

கொண்டு சென்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடி நியமன முறையில் நிரப்ப அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எஸ்.கே.பிரபாகர்,

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் (முகூபொ).

பெறுநர்

முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத்துறை, சென்னை - 25.

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 3.

ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை -32.

நகல்:

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை - 9.

மாண்புமிகு முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -9.

பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத்துறை, சென்னை - 9.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர்,

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை - 9.

இருப்பு கோப்பு/உதிரி நகல்.

(கோ.எண்.14808/எச்.எம்.1/2017)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/10/2018

பிரிவு அலுவலர்.